ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1640/29 - 2010 පෙබරවාරි 12 වැනි සිකුරාදා - 2010.02.12
*1640/29 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் அங்குணுகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

அல்பட் குடா அந்தோனி ஹேவா கமகே என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரை மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் பெயர் குறித்து நியமிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஜாலத் கடுபிடிய ஆரச்சிகே சிரிசேன என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஜயசிங்க ஆரச்சிலாகே சமன்த பிரியலீல் ஜயசிங்ஹ ஆகிய நான் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஜாலத் கடுபிடிய ஆரச்சிகே சிரிசேன என்பவர், அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஜே. ஏ. எஸ். ஜயசிங்க ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாந்தோட்டை.
2010 பெப்புருவரி 02.

*2-685*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் பலபிடிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்புரிமை இல்லாதொழிந்ததன் காரணமாக, பலபிடிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ள தாதலாலும் ;

ஜகமுனி மஹிந்த பிரேமராஜா த சொய்சா எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் பலபிடிய பிரதேச சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடைய ஆள் ஒருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஜீ. பவரசிறி த சொய்சா என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;

இப்போது பலபிடிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்ரஜித் த சில்வா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஜீ. பவரசிறி த சொய்சா என்பவர், அவ் வெற்றிடம் ஏற்பட்ட பலபிடிய பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. பி. ஐ. த சில்வா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பலபிடிய பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
காலி.
2010 பெப்புருவரி 01.

02-686

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.